# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.932/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சாமிநாதன் | த–பெ | பாலசுப்ரமணியன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 60/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கணக்கர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025**

**எதிரிஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கணக்கராக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.06.2018 அன்று ஆறுமுகம் என்பவருக்க்கு கழனிவாசல் சாலையில் ஓம்னி பஸ் ஒன்று அவர் மீது மோதி சாலை விபத்து நேர்ந்ததாக நான் பணியில் இருந்தபோது என்னிடம் நண்பர் ஒருவர் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அவரை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்திருந்தார்கள். போலீசார் விசாரணையில் அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையில் கடந்த 04.06.2018 அன்று மாலை 5.10 மணியளவில் கழனிவாசல் விளம் ஆட்டோ ஓர்க்ஸ் அருகில் வந்து கொண்டிருந்தபோது ஆறுமுகம் என்பவர் இருசக்கர வாகனத்தில் சம்பவ சாலையில் கிழக்கில் இருந்து மேற்காக சென்று கொண்டிருந்தபோது கேவிஎன் தனியார் பேருந்து சம்பவ சாலையின் எதிர் புறமாக அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் அதன் ஓட்டுநர் ஓட்டி வந்து நிலைதடுமாறி ஆறுமுகம் சென்ற வாகனத்தின் மீது மோதி சம்பவ இடத்திலேயே ஆறுமுகம் இறந்து விட்ட நிகழ்வை நேரடியாக பார்த்து காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த விபரம் அனைத்தையும் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.08 16:56:20 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.932/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கார்மேகம் | த–பெ | சுப்பையா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஜேசிபி மெக்கானிக் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025**

**எதிரிஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஜேசிபி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.06.2018 அன்று ஆறுமுகம் என்பவருக்கு கழனிவாசல் விளம் ஆட்டோ ஓர்க்ஸ் அருகில் அவருக்கு சாலை விபத்து நேர்ந்ததாக நான் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். பின்னர் அங்கு சென்று பார்த்தபோது அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். பேருந்து ஒன்று அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன். மற்றபடி எப்படி விபத்து நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 04.06.2018 அன்று மாலை 5.10 மணியளவில் கழனிவாசல் விளம் ஆட்டோ ஓர்க்ஸ் அருகில் வந்து கொண்டிருந்தபோது ஆறுமுகம் என்பவர் இருசக்கர வாகனத்தில் சம்பவ சாலையில் கிழக்கில் இருந்து மேற்காக சென்று கொண்டிருந்தபோது கேவிஎன் தனியார் பேருந்து சம்பவ சாலையின் எதிர் புறமாக அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் அதன் ஓட்டுநர் ஓட்டி வந்து நிலைதடுமாறி ஆறுமுகம் சென்ற வாகனத்தின் மீது மோதி சம்பவ இடத்திலேயே ஆறுமுகம் இறந்து விட்ட நிகழ்வை நேரடியாக பார்த்து காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த விபரம் அனைத்தையும் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.08 16:56:26 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி